பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
17 11 2026 TUESDAY 7 15 AM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி, மணிலாவில் இன்று நடைபெறும் இந்தியா - ஆசியான் உச்சமாநாட்டில் பங்கேற்கிறார்.

- நாடு கடந்த 12 ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வலுவாக இருப்பதுடன் முதலீட்டுக்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் சிங்கப்பூருடனான ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

- ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

>>>>><<<<<

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெறும் இந்தியா - ஆசியான் உச்சமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

இம்மாநாட்டில், இந்தியா-ஆசியான் செயல்திட்டம் குறித்தும், எதிர்காலத்தில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

கிழக்காசிய உச்சி மாநாடும் மணிலாவில் இன்று நடைபெறவுள்ளது.

சர்வதேச மற்றும் மண்டல விவகாரங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்தோ-பசிபிக் மண்டலத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து இம்மாநாட்டில் விரிவாக ஆலோசிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

நாடு கடந்த 12 ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

விஜயவாடாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ராமோஜி ராவ் சிறப்பு விருதுகரள வழங்கி பேசிய அவர், ஊடகத் துறையில் ராமோஜி ராவ் ஆற்றிய பங்களிப்புகளை நினைவுகூர்ந்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் பொருளாதாரம், உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம், தேசியப் பாதுகாப்பு என அனைத்திலும் நாடு முன்னேறி வருவதாக அவர் தெரிவித்தார்.

விமான நிலையங்களின் விரிவாக்கம், கிராமப்புறங்களில் இணைய வசதி, உற்பத்தித் துறையின் வளர்ச்சி ஆகியவற்றை அவர் சுட்டிக்காட்டினார். நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வன்முறை ஒடுக்கப்பட்டதன் மூலம் அந்த பகுதிகளிலும் விரைவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக திரு அமித் ஷா கூறினார்

>>>>><<<<<

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வலுவாக இருப்பதுடன் முதலீட்டுக்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் அமெரிக்கா-இந்தியா உத்திசார் ஒத்துழைப்பு அமைப்பின் நிர்வாகக் குழுவினருடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

நாட்டின் விரைவான வளர்ச்சி மற்றும் எதிர்கால வாய்ப்புகள் குறித்து அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்தியாவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>>><<<<<

நாட்டின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பாதுகாப்பதுடன், அவற்றை வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வளர்ச்சியுடன் இணைக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய கலாசாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கலாச்சாரத் துறை உச்சிமாநாட்டில் பங்கேற்ற அவர், இந்தியாவின் பாரம்பரியம் என்பது கடந்த காலத்தின் பெருமை மட்டுமல்ல எனவும் அது வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான வலிமையான அடித்தளமாகவும் உள்ளது எனவும் கூறினார்.

இந்தியாவின் படைப்பாற்றலும் பன்முகத்தன்மையும் நாட்டின் உண்மையான பலம் என்று அவர் குறிப்பிட்டார்.

படைப்பாற்றல் துறை மூலம் இந்தியாவுக்கு புதிய வாய்ப்புகள் உருவாகி வருவதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.

>>>>><<<<<

பாரம்பரிய கைத்தறி மற்றும் கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் அரங்கை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த தனித்துவமான கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நேரடியாகவும் மறைமுகமாகவும் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்திற்கு இந்த துறை உதவுவதாக அவர் குறிப்பிட்டார்.

மூலப்பொருட்கள் வழங்குதல், நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், வடிவமைப்பை மேம்படுத்துதல், சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல் உள்ளிட்டவற்றின் மூலம் இத்துறையை அரசு தொடர்ந்து வலுப்படுத்தி வருவதாக திரு கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

நிதி தொழில்நுட்பத் துறையில் எகிப்துடனான ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக கெய்ரோ சென்றுள்ள அவர் அங்கு நடைபெற்ற இந்தியா-எகிப்து புத்தொழில் நிறுவனங்கள் மாநாட்டில் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவின் யு.பி.ஐ. மற்றும் எகிப்தின் இன்ஸ்டாபே ஆகிய பணப்பரிவர்த்தனை முறைகளுக்கு இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

இந்த அமைப்புகளை இணைப்பதன் மூலமும் இருநாட்டு வர்த்தகத்தை அதிகரிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

நீர்ப்பாசனம், கடல்நீரைக் குடிநீராக்குதல், குளிர்பதன சேமிப்பு, மருத்துவத் தொழில்நுட்பம், சுற்றுலா ஆகிய துறைகளிலும் இரு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாக திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்

>>>>><<<<<

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் சிங்கப்பூருடனான ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள அவர், அந்நாட்டு வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. *Zhulkarnain Abdul Rahim*-முடன் பேச்சு நடத்தினார்.

பின்னர் சமூகவலைதளத்தில் திரு. பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள்ள பதிவில், கல்வி, ஆராய்ச்சி, டிஜிட்டல் கட்டமைப்பு உள்ளிட்டவற்றிலும் இருநாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து சிங்கப்பூர் அமைச்சருடன் ஆலோசனை நடத்தியதாக கூறியுள்ளார்.

>>>>><<<<<

சர்வதேச தென்னை கூட்டமைப்பின் மாநாட்டை கேரள மாநிலம் கொச்சியில் மத்திய வேளாண் துறை இணையமைச்சர் திரு. ராம்நாத் தாக்கூர் இன்று தொடங்கி வைக்கிறார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் தென்னை விவசாயிகள், ஆராய்ச்சியாளர்கள், தென்னை சார்ந்த தொழில்முனைவோர் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

தென்னை விவசாயத்தில் உள்ள சவால்கள், புதிய வாய்ப்புகள், நிலையான வளர்ச்சி, உறுப்பு நாடுகளுக்கு இடையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

>>>>><<<<<

அசாமில் ஆக்கிரமிப்பில் உள்ள, வனத்துறைக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்தும் மீட்கப்படும் என்று முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

வனத் துறை நிலங்களை மீட்பதற்காக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

மாநிலத்தில் மூன்று லட்சத்து 16 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமான வன நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருப்பதாக அவர் கூறினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 18 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமான வன நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் முழுமையாக மீட்கப்படும் வரை நடவடிக்கைகள் தொடரும் என்றும் காடுகள், வனவிலங்குகளின் வாழ்விடங்கள் மற்றும் அரசு நிலங்களைப் பாதுகாப்பது அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்று எனவும் திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா தெரிவித்தார்

>>>>><<<<<

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் செயல்பாடுகளை இந்தியக் கடற்படை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகக் கடற்படைத் தளபதி அட்மிரல் திரு. Krishna Swaminathan தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தேசியப் பாதுகாப்பு உச்சி மாநாட்டில் பேசிய அவர், இந்தியப் பெருங்கடல் உலகப் பொதுச் சொத்தாகும் என்றும், அனைத்து நாடுகளுக்கும் அங்கு கப்பல் போக்குவரத்தை மேற்கொள்ளும் உரிமை உள்ளது என்றும் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில் கடற்படை மிகப்பெரிய அளவில் நவீனமயமாக்கப்பட்டுள்ளதாகவும் திரு. Krishna Swaminathan குறிப்பிட்டார்

>>>>><<<<<

புயல் பாதிப்பிலிருந்து மக்களைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஒடிசா வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. Suresh Pujari தெரிவித்துள்ளார்.

'அக்வான்' புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புவனேஸ்வரில் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்த புயலால் மாநிலத்தில் கஞ்சம், கஜபதி, பூரி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியிருப்பதை அடுத்து, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்

>>>>><<<<<

அகமதாபாதில் சபர்மதி நதியின், இரு கரைகளிலும் மொத்தம் 40 கிலோமீட்டர் தூரத்திற்கு நதிக்கரை மேம்பாட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது என்று குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர படேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகளை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

வரும் 22ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் ஸ்ரீகாந்த், லக்ஷயா சென், அஸ்மிதா சாலிகா, உன்னத்தி ஹூடா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

உலக ஸ்னூக்கர் போட்டி இந்தூரில் நேற்று தொடங்கியது.

இப்போட்டியை மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தொடங்கி வைத்தார்.

வரும் 21ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த போட்டியில், 35 நாடுகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

>>>>><<<<<